“***செய்திகள் / அறிவிப்புகள்***”

இக்குழுமமானது, 2012 ஆம் ஆண்டிற்கான 13,320 இரண்டாம் நிலைக் காவலர்கள் (ஆண் / பெண்), இரண்டாம் நிலைச் சிறைக் காவலர்கள் மற்றும் தீயணைப்போர்கள் பதவிகளுக்கான பொதுத் தேர்வினை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது. இக்குழுமம், நவம்பர் 1991 -ல், அரசு ஆணை எண். 1806, உள் (பணிகள்-F) துறை, நாள் 29.11.1991 -ன்படி, துவங்கப்பட்டதற்கு பின்னர், இக்குழும வரலாற்றிலேயே மிக உயரிய எண்ணிக்கையில், சீருடைப் பணியாளர்களை தெரிவு செய்ய தேர்வு நடத்தியுள்ளது, மகத்தான சாதனையாகும். இது வரையில், இக்குழுமமானது, 92,310 சீருடைப் பணியாளர்களை (79,848 இரண்டாம் நிலைக் காவலர்கள் (ஆண் / பெண்), 2431 இரண்டாம் நிலைச் சிறைக் காவலர்கள் (ஆண்/ பெண்), 4541 தீயணைப்போர்கள், 5099 சார்பு ஆய்வாளர்கள் (ஆண்/பெண்), மற்றும் 391 சார்பு ஆய்வாளர்கள் (தொழில்நுட்பம்) (ஆண்/பெண்)) தேர்வு செய்துள்ளது.

2) விரைவில், இக்குழுமத்தால், தேர்வுகள் நடத்திட திட்டமிட்டுள்ள அட்டவணையில், இரண்டாம் நிலைக் காவலர்கள், இரண்டாம் நிலைச் சிறைக் காவலர்கள் மற்றும் தீயணைப்போர்களுக்கான பொதுத் தேர்வு மிக முக்கியமான ஒன்றாகும். இது தொடர்பாக, காவல்துறை தலைமை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை-4 அவர்கள், ஜூன் 2013 வரையிலான, காலிப் பணியிட எண்ணிக்கைகளை கணித்து, 13,294 இரண்டாம் நிலைக் காவலர்களுக்கான (9191 ஆண்கள் (சேமநலப்படை), 3938 பெண்கள் (சேமநலப்படை), 165 ஆண்கள் (தமிழ்நாடு சிறப்பு காவல் படை)) காலிப் பணியிட விவரங்களை இக்குழுத்திற்கு தெரிவித்து, தேர்வு நடத்திட உரிய நடவடிக்கை எடுக்குமாறு, இக்குழுமத்தினை வேண்டியுள்ளார். இக்காலிப் பணியிடங்களில், காவல் நிலையங்களை மீளவகைப்படுத்துதல் தொடர்பாக, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவிக்கையில், கூடுதலாக ஒப்பளிப்பளிக்கப்பட்ட, 5000 இரண்டாம் நிலைக் காவலர்கள் எண்ணிக்கையும் அடங்கியதாகும். சிறைத்துறை மற்றும் தீயணைப்பு

மற்றும் மீட்புப் பணிகள் துறைகளுக்கான, காலிப்பணியிட மதிப்பீட்டு விவரங்கள், இக்குழுமத்தில், ஏற்கனவே, பெறப்பட்டுவிட்டன. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநா் அவா்கள், அத்துறையில், 905 தீயணைப்போா்கள் காலிப்பணியிடங்கள் உள்ளன எனவும், மற்றும் கூடுதல் காவல்துறை இயக்குநா், சிறைத்துறை, அவா்கள், சிறைத்துறையில் 305 சிறைக்காவலா்கள் (ஆண்) காலிப்பணியிடங்கள் உள்ளன எனவும் தெரிவித்துள்ளனா்.

3) எனவே, 2013-2014 ஆம் ஆண்டில், காவல்துறை, சிறைத்துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் உள்ள, 14,504 காலிப்பணியிடங்களை (13,294 இரண்டாம் நிலைக் காவலா்கள், 305 சிறைக்காவலா்கள், 905 தீயணைப்போா்கள்) நிரப்பிட, பொதுத் தோ்வு நடத்தப்பட உள்ளது. பெரிய அளவிலான இதர தோ்வு நிகழ்வில், 886 சாா்பு ஆய்வாளா்கள் (தாலுகா), 234 சாா்பு ஆய்வாளா்கள் (தொழில்நுட்பம்), மற்றும் 197 சாா்பு ஆய்வாளா்கள் (கைரேகை பிரிவு) தோ்வுகளும் உள்ளடங்கியதாகும். தற்போது, இக்குழுமமானது, கொள்குறி வகையில் தோ்வு நடத்தி, உறுப்பினா்களை தமிழ்நாடு சிறப்பு காவல் இளைஞா் படைக்கு தோ்வு செய்திடும் பணியினை மேற்கொள்ள பணிக்கப்பட்டுள்ளது.

4) இக்குழுமமானது, மேற்குறிப்பிட்ட தோ்வுகளை நடத்திட தயாா் நிலையில் உள்ளது. இத்தோ்வுகளுக்கான அறிவிப்புகள், காவல்துறை தலைமை இயக்குநா், தமிழ்நாடு, சென்னை-4 அவா்கள் அரசிடமிருந்து வேண்டியுள்ள, சில திருத்த ஆணைகள் தொடா்பான, அரசு ஆணைகள் கிடைக்கப்பெற்றவுடன், மிக விரைவில் வெளியிடப்படும். இவ்வாணைகள், விரைவில் கிடைக்குமென எதிா்பாா்க்கப்படுகிறது.

5) அண்மை மாதங்களில், இக்குழுமத்தில், கூடுதல் திறன் மற்றும் ஆதாரங்கள் சிறந்த வகையில் வளா்ச்சியடைந்துள்ளது. 2012 ஆம் ஆண்டு டிசம்பா் மாதம் நடைபெற்ற, மாவட்ட ஆட்சித் தலைவா்கள் மற்றும் மூத்த காவல்

அதிகாரிகள் மாநாட்டில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இக்குழுமத்திற்கு 11 மூத்தநிலை பதவியிடங்களை கனிவுடன் ஒப்பளிப்பு செய்துள்ளார்கள். இப்பதவியிடங்கள், 1 காவல்துறை துணைத் தலைவர், 1 காவல் கண்காணிப்பாளர், 3 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 2 துணைக் காவல் கண்காணிப்பாளர்கள், 4 காவல் ஆய்வாளர்கள் மற்றும் 1 துணைச் சட்ட ஆலோசகர் பதவிகளை கொண்டதாகும். மேலும், தேர்வுப் பணிகளை, கணினி செயல்வழியாக, விரைந்து நடத்திட ஏதுவாக 25 கணினிகள் இக்குழுமத்திற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளன. அரசு ஆணைகள் பெறப்பட்டு, அவ்வாணைகள், விரைவு முறையில், செயல்படுத்தப்படுகிறது.

6) ஏப்ரல், 2013 மாதத்தில், காவல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பிரிவு, புதுடெல்லி ஆனது இக்குழுமம், வெளிப்படையான தேர்வு நடத்துவதில், தேசிய அளவில், மாநிலங்களுக்குள், தரவரிசை பட்டியலில் 9 ஆம் இடத்திலிருந்து 8 ஆம் இடத்திற்கு தரம் உயர்த்தியுள்ளது மிகவும் திருப்திகரமானதாக உள்ளது. நடைபெறவிருக்கின்ற தேர்வுகளில், டிஜிட்டல் உயரம் அளக்கும் கருவி மற்றும் மார்பு அளக்கும் கருவிகள், மற்றும் டிஜிட்டல் காட்சித் திரை ஆகியன பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதால், இக்குழுமத்தின் தரம் மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொடக்கத்தின் பகுதியாக, இக்குழுமம், ஏற்கனவே, 100 மடிக் கணினிகளையும், 10 மேஜை கணினிகளையும் முயன்று பெற்றுள்ளது.

7) தற்போது, இக்குழுமமானது, பி.டி.லீ. செங்கல்வராய நாயக்கர் மாளிகை வளாகத்திலுள்ள, எண். 807, இரண்டாம் தளம், அண்ணா சாலை, சென்னை-2 என்ற முகவரியில், வாடகை கட்டணத்தில் செயல்பட்டு வருகிறது. தற்போது இருக்குமிடம், ஏற்றதாக இல்லாததால், இக்குழுமத்திற்கு அரசு கட்டிடம் கட்டுவது தொடர்பாக அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. இக்குழுமத்திற்கு புதிய அரசு கட்டிடம் கட்டுவதற்கு, அரசு, ரூ.6,54,13,467/- ஒப்பளிப்பு செய்துள்ளது.

சென்னை எழும்பூரில், புதிய அரசு கட்டிடம், கட்டும் பணி, ஜனவரி 2013 -ல் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியத்தினால், தொடங்கப்பட்டுள்ளது.